**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18ம் நாள் திங்கட்கிழமை

**IA.No.03/2024 in OS.No.111/2019**

**TNTM 03000311/2019**

S.புருஷோத்தமன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. T.P.சண்முக முதலியார்(இறந்தவர்)
2. J.ராமு ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 27.07.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.P.ஜெகதீசன்,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுச் சொத்தை ஒரு வழக்கறிஞர் ஆணையர் அவர்களை நியமனம் செய்து மேற்படி மனுச்சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் ஆகியோர்களின் உதவியுடன் அளந்து பார்வையிட்டு அவற்றின் இயற்கை அமைப்புகளுடன் கூடிய ஒரு வரைபடத்தையும், அறிக்கையும் தாக்கல் செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26, விதி 9 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்/வாதியின் மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் மேற்படி மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் மேற்படி அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்து மனுதாரருக்கு உரிமையானது என விளம்புகை செய்யக்கோரியும். வழக்கு சொத்தின் மீது 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி ஆவணங்கள் ஏதும் உருவாக்கக்கூடாது என ஒரு நிரந்தரதடை உத்தரவு கோரியும், 10.01.2007 அன்று 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கத்தல்ல என விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மேற்படி வழக்கோடு தாக்கல் செய்துள்ள வழக்குரையையும் வரைபடத்தையும் ஒரு அங்கமாக பாவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுதாரருடைய தந்தை ஆவார். மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் பொதுவில் உரிமையாக இருந்துவந்த இந்து கூட்டுக்குடும்ப மற்றும் மூதாதையர் சொத்துக்கள் 12.06.1978 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் வாயிலாக

பங்கு பிரிக்கப்பட்டது மேற்படி 1978ம் ஆண்டு ஆவணத்தில் 'C' பட்டியல் சொத்துக்கள் மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் பங்காக ஒதுக்கப்பட்டன. மேற்படி சொத்துக்கள் மூதாதையர் மற்றும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் அவற்றில் மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கும். அவருடைய வாரிசுகளான மனுதாரர் உட்பட அனைவரும் அடங்கிய இந்து கூட்டுக்குடும்பத்திற்கு உரிமையாக இருந்து வந்தன. கூட்டு குடும்ப உறுப்பினர்கள் அனைவராலும் அச்சொத்துக்கள் பொதுவாகவே ஆண்டும் பயன்படுத்தப்பட்டும் வந்தனர்.

2. அதன்பின்னர் 1ம் எதிர்மனுதாரரின் மகள்களுக்கு திருமணமானபின், கூட்டுக்குடும்ப சொத்துக்கள் குறித்துக் குடும்ப உறுப்பினர்களுக்குள் பங்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டு. 1993ல் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்களான மகன்கள், மகள்கள் ஆகியோரும் கலந்து ஆலோசனை செய்ததில், மகள்கள் குடும்ப சொத்துக்களில் தங்கள் பங்கிற்கு ஈடான பணத்தை பெற்று கொள்வதாகவும், சொத்தில் பங்கு ஒதுக்க தேவையில்லை என்றும் கூறி, 26.11.1993 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட பொது பாகபாத்திய அக்கு விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்துவிட்டனர். அதன்பிறகு 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய மகன்களான மனுதாரரும், மனுதாரரின் சகோதரரான விஜயகுமார் ஆகியோர் குடும்ப சொத்துக்களை பங்கீடு செய்வது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு, 12.06.1978ம் நாளிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில், முள்ளிப்பட்டு கிராம புல எண்.203/2ல் அமைந்த ஏக் 1.05 பரப்புள்ள நிலம் இரண்டாக பிரிக்கப்பட்டு, அதன் மேற்கு பகுதியான ஏக் 0−52 1/2 பரப்பு நிலம் மேற்படி ஆவணத்தின் 'B' பட்டியல் இரண்டாம் இனமாக 1ம் எதிர்மனுதாரரின் சகோதரரான T.P.அருணகிரி முதலியாருக்கும், கிழக்கு பாதியான ஏக் 0−52 1/2 பரப்பு நிலம் மேற்படி ஆவணத்தின் 'C' பட்டியல் இரண்டாம் இனமாக 1ம் எதிர்மனுதாரரின் பங்கிற்கும் ஒதுக்கப்பட்டன. இரு சகோதரர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மேற்படி நிலங்களை மனைகளாக பிரித்து விற்க முடிவு செய்திருந்தார்கள். அதன்படி மேற்படி புல எண்.203/2ல் மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் பங்கிற்கும் அவருடைய சகோதரர் T.P.அருணகிரி முதலியார் பங்கிற்கும் இடையில் இருவரும் தலா கிழக்கு − மேற்கு 10 அடி அகல நிலத்தை பொதுவாக விட்டு, இரண்டும் சேர்ந்தாற்போல் 20 அகல பொதுத்தெருவை ஏற்படுத்தி, அதற்கு தங்கள் தந்தையின் நினைவாக T.A.பெருமாள்சாமி முதலியார் தெரு என பெயரிட்டனர். அந்த தெருவானது வடக்கு − தெற்காக செல்லும் தெருவாகும். அதன் இருபுறமும் 1ம் எதிர்மனுதாரரும், அவரின் சகோதரர் அருணகிரி முதலியாரும் தங்களுக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த நிலங்களை மனைகளை பிரித்து விற்பனை செய்ய முடிவு செய்தனர் அந்த மனைப்பிரிவு விவரத்தை காட்டும் வரைபடம் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தில் காட்டியுள்ளவாறு மேற்சொன்ன தெருவின் மேற்புறம் அருணகிரி முதலியார் மனைகளும், கீழ்புறம் 1ம் எதிர்மனுதாரரின் மனைகளும் உள்ளன. அவற்றில் 1 முதல் 15 எண்கள் கொண்ட மனைகள் அருணகிரி முதலியாருக்கும். 16 முதல் 30 எண்கள் கொண்ட மனைகள் 1ம் எதிர்மனுதாரருக்கும் வழங்கப்பட்டன. மேற்படி 1ம் எதிர்மனுதாரரும், அவருடைய மகன்களும் மகள்களும் பாகப்பிரிவினை குறித்து ஆலோசனை செய்வதற்கு முன்பே அந்த மனைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு விட்டன.

3. மேற்படி, 1ம் எதிர்மனுதாரரின் மகள்கள் 1993ம் நாளிட்ட பொதுபாக பாத்திய அக்கு விடுதலை ஆவணத்தை எழுதிக்கொடுத்த சில நாள்களில், 1ம் எதிர்மனுதாரரும், அவருடைய மகன்களும் வாய்மொழியாக தங்களுக்குள் ஒரு பாகப்பிரிவினையை ஏற்படுத்தி கொண்டனர். அதன்படி 12.06.1978ம் நாளிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் 'C' பட்டியல் 1ம் இனச்சொத்தாக 1ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சைதாப்பேட்டை முள்ளிப்பட்டு சாலையில் அமைந்த வீடு 1ம் எதிர்மனுதாரரின் இளைய மகனான விஜயகுமார் பங்கிற்கு ஒதுக்கப்பட்டது. மேற்சொன்ன முள்ளிப்பட்டு கிராம புல எண்.203/2ல் மனைப்பிரிவு செய்யப்பட்ட எண்கள் 16, 17, 18, 19 கொண்ட மனைகள் மூத்த மகனான எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. 1ம் எதிர்மனுதாரருக்கு அதே சொத்தில் அமைந்த 23, 27, 28, 29, 30 எண்கள் கொண்ட மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மேலும், 24, 25, 26 எண்கள் கொண்ட மனைகள் இளைய மகன் விஜயகுமாரின் திருமண செலவிற்கும். 20, 21, 22 எண்கள் கொண்ட மனைகள் எனக்கு திருமண செலவிற்கும் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் முடிவு செய்யப்பட்டன. மேற்படி பாகப்பிரிவினையின் படி அவரவர் பங்கிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர் தனித்தனியே ஆண்டும், பயன்படுத்தியும் வந்தார்கள்.

4. மேற்படி 1ம் எதிர்மனுதாரர். வாய்மொழி பாகப்பிரிவினையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட எல்லா மனைகளையும் தாமேவிற்று அவற்றில் கிடைத்த பணத்தை தாமே எடுத்துக்கொண்டார். நானும், எனது சகோதரர் விஜயகுமாரும் எங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளை விற்காமல் வைத்திருந்தோம். இதற்கிடையில் நான் எனது தாய், தந்தையர் அவர்களின் இசைவின்றித என் விருப்பத்தின் படி 1998ம் ஆண்டு மீனா என்பவரை திருமணம் செய்து கொண்டேன். மேற்படி எனக்கு எந்தவிதமான செலவுமின்றி கும்பகோணம் வரசித்தி விநாயகர் கோயிலில் நடைபெற்றது. ஆகையால் எனக்கு திருமண செலவிற்காக ஒதுக்கப்பட்ட எண்கள் 20, 21, 22 கொண்ட மனைகள் விற்பனை செய்ய வேண்டிய தேவையின்றி போனது. அதன்பிறகு மேற்படி மனைகள் எனக்கே உரிமையாகி இருந்தன. எனது சகோதரரான விஜயகுமார் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட மனைகள் உடனடியாக விற்பனை செய்ய முடியவில்லை, ஆதலால் கடன்களை வாங்கி 1999ம் ஆண்டு திருமணம் செய்யப்பட்டது. அதன்பின்னர், 10.05.1999 அன்று விஜயகுமாருக்கு திருமணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 24, 25 மனைகள் வி.எஸ்.செங்கல்வராயன் என்பவருக்கும். 02.06.1999 அன்று மனையான 26 மேற்படி வி.எஸ்.செங்கல்வராயனின் மருமகனான ஆர்.நமச்சிவாயம் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டன. பாகப்பிரிவினை வாய்மொழியாக ஏற்பட்டிருந்ததால், மேற்படி 1ம் எதிர்மனுதாரரே மேற்படி விற்பனை ஆவணங்களை எழுதிக்கொடுத்திருந்தார். இருப்பினும் மேற்படி விஜயகுமாரின் பங்கிற்காக அவை ஒதுக்கப்பட்டு இருந்ததால், அவரிடம் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது. மேற்படி 02.06.1999ம் நாளிட்ட விற்பனை ஆவணத்தில் மட்டும். பெயரளவுக்கு நானும் சாட்சி கையெழுத்து செய்து உள்ளேன்.

5. அதன்பிறகு எனது சகோதரரும், 1ம் எதிர்மனுதாரரின் இளைய மகனுமான விஜயகுமார் என்பவர் 07-01-2004 அன்று இறந்து விட்டார் விஜயகுமாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டைக் குறித்து முறையான மேற்படி ஆவணம் எழுத வேண்டி 1ம்

எதிர்மனுதாரர், அவ்வீட்டை விஜயகுமாரின் இளவர் மகனான ராகுலுக்கு ஒரு கொடை ஆவணம் (Settlement Deed) எழுதிக் கொடுத்தார். பின்னர். 22.03.2004ம் நாளன்று எனக்கு ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 16, 17, 18, 19 எண்கள் கொண்ட மனைகளையும் என் பெயருக்கு, 1ம் எதிர்மனுதாரர் ஒரு கொடை ஆவணம் (Settlement Deed) எழுதி கொடுத்தார். அந்த சமயத்தில் எனக்கு திருமணத்திற்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்கள் 20, 21, 22 கொண்ட மனைகள் விற்பனை செய்து என் தொழிலை விரிவாக்கம் செய்ய நினைத்திருந்தேன். ஆகையால், என் பெயருக்கு கொடை ஆவணம் எழுதி கொடுத்து மீண்டும் விற்பனை ஆவணம் எழுதுவது வீண் செலவாகும் என்பதால், அதனால் விற்பனை செய்யும்போது தாமே விஜயகுமார் மனைகளை விற்பனை ஆவணம் எழுதிக்கொடுத்ததைப் போல் எழுதி கொடுத்து விடுவதாக 1ம் எதிர்மனுதாரர் கூறினார். அதற்கு எனக்கு சரியென்று பட்டதால் நானும் அதற்கு ஒப்புக்கொண்டேன்.

6. ஆனால், காலப்போக்கில் அந்த மனைகளை விற்க வேண்டிய தேவை இல்லாத அளவிற்கு கும்பகோணத்திலேயே எனக்கு தொழிலில் போதிய வருவாய் கிட்டியதால், என் திருமணத்திற்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்கள் 20, 21, 22 கொண்ட மனைகளை விற்க வேண்டும் என்றோ அல்லது செட்டில்மெண்ட எழுதி வாங்கவோ வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. என் பெயருக்கு கொடை ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட 16, 17, 18, 19 எண்கள் கொண்ட மனைகள் போளூர் சாலையில் அமைந்துள்ளன. ஆரணி–ஆற்காடு புறவழிச்சாலை அமைப்பதற்காக போளூர் சாலை விரிவாக்கம் செய்யப்பட்டபோது மேற்படி நான்கு மனைகளிலும் கணிசமான பகுதி அரசினால் கையகப்படுத்தப்பட்டு விட்டது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் 16, 17, 18, 19 எண்கள் கொண்ட மனைகளின் குறுக்கே A–B என்ற புள்ளிகளால் ஆன கோட்டினால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்குத் தென்புறம் உள்ள பகுதி அரசினால் கையகப்படுத்தப்பட்டதாகும் இவ்வாறு ஒழுங்கில்லாமல் 16, 17, 18, 19 எண்கள் கொண்ட மனைகள் குறுக்குவாட்டில் சாலைக்காகக் கையகப்படுத்தப்பட்டன. அந்த மனைகள் எதற்கும் பயன்படாமற் போய்விட்டன. புள்ளிகளாலான மேற்படி கோட்டிற்கு வடக்கில் உள்ள பகுதி மட்டுமே எனக்கு எஞ்சியது. அதில் குடியிருக்க ஒரு வீடும். கூடுதலாக ஒரு கடையும் மட்டுமே என்னால் கட்ட முடிந்தது. அதன்பிறகு நான் 2007ம் ஆண்டு வீடுகட்டி முடித்து உள்ளூரிலேயே வந்து குடியேறி விட்டதாலும், நல்ல முறையில் தொழில் செய்து வந்ததாலும், என் திருமணத்திற்கென்று பாகப்பிரிவினையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்கள் 20. 21, 22 கொண்ட மனைகளை விற்காமல் வைத்திருந்தேன். மேற்படி எண்கள் 20, 21, 22 கொண்ட மனைகள் தான் வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்தாகும்.

7. இவ்வாறிருக்கையில் 2018ம் ஆண்டு மார்ச் மாதம் சில தரகர்கள் வழக்கு சொத்துக்களை வந்து பார்த்து சென்றனர். நான் அதுகுறித்து வினவியபோது 2ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தின் மனைகளை விற்பனை செய்வதற்காக தங்களிடம் கூறியுள்ளதாகவும், அதற்காக பார்வையிட வந்ததாகவும் கூறினார். மேற்படி வழக்கு சொத்துக்கள் தனக்கு உரிமையானவை என்றும், அவற்றில் 2ம் எதிர்மனுதாருக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் கூறினேன். அதற்கு அவர்கள் 1ம் எதிர்மனுதாரர், 2ம்

எதிர்மனுதாரருக்கு வழக்கு சொத்துக்களை விற்பனை செய்துள்ளதாக கூறினார்கள். அதன்பிறகு 2018ம் ஆண்டு மார்ச் மாதம் இணைய தளத்தில் வில்லங்கச்சான்றைப் பார்த்ததில், 10.01.2007 அன்று 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் பெயருக்கு வழக்கு சொத்துக்கள் குறித்து விற்பனை ஆவணம் எழுதி தந்திருப்பது தெரியவந்தது. ஏற்கனவே கூறியது போல் வழக்கு சொத்துக்கள் எனக்கு 1993ம் ஆண்டிலேயே, எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் காலஞ்சென்ற விஜயகுமாருக்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துக்கள் ஆகும். அதன்பின் அவை என் தனிப்பட்ட ஆளுகையிலும், பயன்பாட்டிலும் இருந்து வருகின்றன அதில் 1ம் எதிர்மனுதாரருக்கோ, வேறு எவருக்குமோ எவ்வகையான உரிமையும் இல்லை. இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் பெயருக்கு விற்பனை ஆவணம் எழுதிக்கொடுக்க உரிமை பெற்றவர் அல்லர். எனவே, 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ள 10.01.2007ம் நாளிட்ட விற்பனை ஆவணம் சட்டப்படி செல்லாதது ஆகும். அதன் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரருக்கு வழக்கு சொத்துக்களில் எந்த உரிமையும் ஏற்பட்டுவிடவில்லை. மேலும், அச்சொத்துக்களின் ஆளுகையிலும் நானே உள்ளேன். என் வீட்டின் பின்புறத்திலேயே அவை அமைந்துள்ளதால், அவற்றில் நான் முள்மரங்களை வளர்த்து வருகிறேன். வேண்டியபோது அவற்றை வெட்டி எடுத்து எரிபொருளாகப் பயன்படுத்தி கொள்வேன்.

8. மேற்படி மனு சொத்துக்களானது எனது அனுபவத்தில் இருக்கிறது என்பதற்காகவும், அவற்றில் முள்வேலி மரங்களை வளர்த்து அவற்றை வெட்டி எடுத்து எரிபொருளாக பயன்படுத்தி வருவதையும், மேலும், மனுச்சொத்திற்கு ஒட்டினாற்போல் தெற்கில் எனது வீடு உள்ளது என்பதையும், அதற்கு தெற்கில் ஆரணி ஆற்காடு புறவழிச்சாலை செல்வதையும் இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆதலால், மேற்படி மனுவில் ஒரு வழக்கறிஞர்/ஆணையர் நியமித்து அவர் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சர்வேயர் உதவியுடன் மனுச்சொத்துக்களை அளந்து பார்வையிட்டு அவற்றின் இயற்கை அமைப்புகளுடன் கூடிய ஒரு வரைபடத்தையும், அறிக்கையும் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இதனால், மேற்படி அசல் வழக்கில் வாய்மொழி சாட்சியங்கள் குறைய வாய்ப்புள்ளது, மேலும் நீதிமன்றத்தின் சரியான தீர்ப்புக்கு வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை உகந்ததாகவும் அமையும். மேற்படி வழக்கறிஞர்/ஆணையர் நியமிக்கப்படாமல் விட்டால் மாண்பமை நீதிமன்றத்தின் முன் என்னால் உண்மையான உண்மைகளை நிரூபிக்க முடியாது. இதனால், மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாது இழப்பும், கஷ்டங்கள் ஏற்பட நேரிடும். எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி மனுவில் தயவுசெய்து ஒரு வழக்கறிஞர்/ஆணையர் அவர்களை நியமனம் செய்து மேற்படி மனுச்சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் ஆகியோர்களின் உதவியுடன் அளந்து பார்வையிட்டு அவற்றின் இயற்கை அமைப்புகளுடன் கூடிய ஒரு வரைபடத்தையும், அறிக்கையும் தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

9**. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–**

மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை.

2019ம் வருடம் தாக்கல் செய்த வழக்கில் தற்போது வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்புடையதல்ல. வழக்கை காலம் கடத்தவேண்டியும், அசல் வழக்கில் குழப்பம் ஏற்படுத்தவேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அதே விவரங்களை குறிப்பிட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனார் T.P. சண்முக முதலியார் என்பவரிடமிருந்து மனை எண்கள் 20, 21 மற்றும் 22 ஆகியவற்றை 10.01.2007ம் தேதி இந்த எதிர்மனுதாரர் வாங்கினார். இந்த எதிர்மனுதாரர்தான் அவற்றை அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் அனுபவத்தில் இல்லை. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

<u>10. மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்:—</u>

அசல் வழக்கனாது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி, வாதியின் தகப்பனார் ஆவார். 1ம் பிரதிவாதிக்கு 1978ம் வருடம் பாகப்பிரிவினை பத்திரம் மூலம் "C" அட்டவணை சொத்து கிடைத்தது. அதை வாதியும், 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். 1ம் பிரதிவாதியின் மகள்கள் 1ம் பிரதிவாதிக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். வாதியின் திருமண செலவிற்காக மனை எண்கள்.20, 21, 22 ஆகியவை வாதிக்கு ஒதுக்கப்பட்டது. வாதி அதனை அனுபவம் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு மேற்படி மனை எண்களை கிரையம் கொடுத்துள்ளார். தற்போது வரை வாதி அவற்றை அனுபவம் செய்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்ய வழக்கு சொத்தை வழக்கறிஞர் ஆணையர், நில அளவையர் ஆகியோருடன் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்யவேண்டும் என வாதுரை செய்யப்பட்டது.

11. <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்:—</u>

வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அதே விவரங்களை இம்மனுவில் குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதியிடமிருந்து, 2ம் பிரதிவாதி 10.01.2007ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார். வழக்கு சொத்துகள் வாதிக்கு திருமண செலவிற்காக ஒதுக்கப்பட்டது என்பதற்கு வாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கை காலம் கடத்தவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனுபவத்தை நிரூபணம் செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டு மாண்புமிகு உயர் நீதிமன்றம் வழங்கிய

1. IN THE HIGH COURTOF JUDICATURE AT MADRAS, S.A.NO.77 /1983 Ramasami Vs. Krishnasami alias Krishnan and others, dated 27.02.1996.

2. IN THE HIGH COURTOF JUDICATURE AT MADRAS, C.R.P.(PD) No.1721/2005 and C.M.P.No.19371/2005, 1. Chinnathambi and others Vs. Anjalai dated 22.09.2006 என்ற இரண்டு முன் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி அனுபவத்தை நிரூபணம் செய்வதற்காக வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

12. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

13 மனுதாரர்கள் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

14. <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு 10.01.2007ம் தேதி விற்பனை செய்த கிரைய ஆவண எண்.129/2007 என்ற ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்யவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துகளான மனை எண்கள்.20, 21, 22 ஆகியவை மனுதாரரின் திருமண செலவிற்காக வாய்மொழியில் பாகப்பிரிவினையாக ஒதுக்கப்பட்டது. மனுதாரர் மேற்படி மனைகளை அனுபவம் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு மனுதாரருக்கு தெரியாமல் விற்பனை செய்துள்ளார். மேற்படி விற்பனை செல்லாது என்று விளம்புகை கோரி இவ்வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனுசொத்து எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. மனு சொத்தினை நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி உதவியுடன் வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டு அதன் இயற்கை தன்மை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்யவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15. மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது, மனு சொத்தை வாதி அனுபவம் செய்வதை நிரூபணம் செய்வதற்கு வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை உதவிகரமாக இருக்கும் என்று குறிப்பிட்டு, மனுவை அனுமதிக்கவேண்டும் என்று வாதம் செய்துள்ளார்.

16. மனு சொத்துக்களில் மனுதாரர் அனுபவத்தில் இருப்பதாக வழக்குரையிலும், இந்த மனுவிலும் குறிப்பிட்டுள்ளார். அசல் வழக்கு விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனு சொத்தை அனுபவம் செய்வதை தனது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். மனுதாரர் மனு சொத்தில் அனுபவத்தில் இருப்பதை நிரூபணம் செய்வதற்கு தனது தரப்பில் ஆதாரத்தை சேகரிக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது, ஒரு தரப்பினரின் அனுபவத்தை நிரூபணம் செய்வதற்கு வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டு முன்தீர்ப்புகளை மேற்கோள் காட்டி மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்துள்ளார்.

17. இந்த வழக்கில் உள்ள இருதரப்பினர்களுக்கும் இடையே உள்ள பிரச்சனை வழக்கு சொத்து குறித்த உரிமை மூலம் பற்றி தீர்வு காணப்படவேண்டும் என்பதாகும். அசல் வழக்கை தீர்வு காண்பதற்கு வழக்கு சொத்து குறித்த இயற்கை அமைப்பு குறித்த வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. வழக்கின் தரப்பினர் தங்களது அனுபவத்தை நிரூபணம் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யமுடியாது.வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மூலம் அனுபவத்தை நிரூபணம் செய்ய முடியாது என்பது நிலை நிறுத்தப்பட்ட சட்ட நிலமை ஆகும். அசல் வழக்கில் உள்ள தரப்பினர்களுக்கு இடையே உள்ள வழக்கு சொத்து சம்மந்தமான பிரச்சனையை தீர்வு காண்பதற்கு வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை இந்த வழக்கிற்கு அவசியம் இல்லை என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.08.18 18:13:16 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.08.18 18:13:28 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.